Center for Chemical Process Safety
An AIChE Technology Alliance
www.aiche.org/ccps

Process Safety Beacon
http://www.aiche.org/CCPS/Publications/Beacon/index.aspx
Messages for Manufacturing Personnel

This issue sponsored by
ioMosaic®
Minimizing risk. Maximizing potential.®
www.iomosaic.com

# நன்கு அறியப்பட்ட பறக்கும் பொருட்கள்

December 2019

ஆள் இல்லா  வான் வாகனங்கள் அல்லது அமைப்புகள் ( UAVs , UASs ; டிரோன்ஸ்) போன்றவைகளின் பயன்பாடு தற்போது பரவலாக உள்ளது. இவை பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றி தொழிற்சலைகளில் ஆய்வுக்ககாகவும், விவசாயம், சுற்றுச்சூழலியல்,கண்காணிப்பு, அளவீடுகள் போன்றவற்றிலும் பயன்படுத்தப்படுகிறது. இவைகள் தற்போது மாதிரிவிமானங்கள் போன்று எண்ணற்ற வகையில் உள்ளன. இவை தொழிற்சாலைகளில் எந்திரங்கள் மீது  மோதினால் தீ விபத்து, வெடி விபத்து போன்ற பெரிய சேதங்களை ஏற்படுத்தும். சமீபத்தில் ஒரு தொழிற்சாலையில் அப்படியொரு விபத்து ராணுவ டிரோனால்  ஏற்பட்டது.

விழாக்காலங்களில் பயன்படுத்தப்படும் வானவெடிகள், வான் பட்டாசுகள் போன்றவை தீப்பற்றக்கூடிய பொருட்கள் சேமிக்கும்இடங்களுக்கு  தீப்பொறியை கொண்டு சேர்க்கும். பட்டாசுகளுக்கு பதிலாக வான் விளக்குகள் (AKA  Sky Lanterns) பயன்படுத்தப்படுகிறது.இ வைகளும் தீப்பொறி உருவாக்கக்கூடியவை. மேலும் நீண்ட தூரம் பயணிக்கக்கூடியவை. பலூனில்  பறப்பவர்கள் தொழிற்சாலைகளுக்குள்ளே இழுத்து செல்லப்பட்டு அவசர தரை இறக்கம் செய்யப்பட்ட நிழகழ்வுகளும் உண்டு. ஏப்ரல் 2017 பீகான் மற்றும் கீழே உள்ள படத்தை பார்க்கவும். ( Mr. பொடேடோ தலைகீழாக உள்ளார்).









## உங்களுக்கு தெரியுமா?

- பலூன் விபத்து எதிர்பார்க்காத ஒன்றாக இருந்தாலும் அந்த தொழிற்சாலையில் இருந்தவர்கள் அதை திறம்பட கையாண்டனர். இதற்கு காரணம் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகள், அவசரகால ஒத்திகைகள்தான்.
- பறக்கும் பொருட்களால் புறச்சேதாரம், தீ விபத்து போன்றவை மட்டும் ஏற்படுவதில்லை. அவை மின்கம்பிகள் மீது விழுந்தால் மின்சாரம் குறுக்கு சுற்றில் பாய்ந்து  விபரீத விளைவுகள் ஏற்படும். PET தகடுகளால் செய்யப்பட்டு மேற்புறத்தில் உலோகம் பூசப்பட்ட ஹீலியம் பலூன்களால் இத்தகைய விபத்துகள் அதிகம் நிகழ்ந்துள்ளன.

## நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

- தொழிற்சாலையில் மேற்பார்வையிட செல்லும்போது வானத்தையும் கவனிக்கவும்.
- தொழிற்சாலையின் மீது அச்சுறுத்தும் வகையில் (பறவைகள் தவிர) ஏதேனும் பறக்கின்றனவா என கவனிக்கவும்.
- பட்டாசு, வான் விளக்கு, மற்றும் பலூன்கள் பறக்கவிடும் காலங்களில் அதிக கவனமுடன் இருக்க வேண்டும்.
- இரசாயன தொழிற்சாலைகள், எரிபொருட்கள் சேமிக்கும் இடங்களின் அருகில் வசிக்கும் மக்கள் பட்டாசு அல்லது டிரோன் பயன்படுத்த திட்டமிட்டிருந்தால் அவர்களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்கவும்..
- உங்கள் தொழிற்சாலைகளில் டிரோன் பயன்படுத்துவதாக இருந்தால் அதை வழக்கமற்ற செயலக கருதி தேவையான அனுமதி பெற்றபின்னரே டிரோனை பயன்படுத்த வேண்டும்.

***“ஒவ்வொரு  நல்ல பரிசும்  உயர்வானதுதான் - ஆனால் இதன் வழியாகவும்  சில ஆபத்துகள் வரலாம் !***

©AIChE 2019. All rights reserved. Reproduction for non-commercial, educational purposes is encouraged. However, reproduction for any commercial purpose without express written consent of AIChE is strictly prohibited. Contact us at ccps_beacon@aiche.org or 646-495-1371.

The Beacon is usually available in Afrikaans, Arabic, Catalan, Chinese, Czech, Danish, Dutch, English, Filipino, French, German, Greek, Gujarati, Hebrew, Hindi, Hungarian, Indonesian, Italian, Japanese, Korean, Malay, Marathi, Mongolian, Persian (Farsi), Polish, Portuguese, Romanian, Russian, Spanish, Swedish,  Tamil,Telugu, Thai, Turkish, Urdu, and Vietnamese.